## தொகுதி 9 – ஞானமான வாடிக்கையாளர் செயற்பாட்டுத் தாள் 9-1 வாடிக்கையாளர் வினாடிவினா

நீங்கள் எப்படியான வாடிக்கையாளர்? உங்கள் பதிலை வட்டமிடவும்.

1. **பெறுமதி கூடிய ஒன்றை வாங்குமுன், பொருளைப்பற்றியும் அதைத் தயாரிக்கும் கம்பனிபற்றியும் ஆய்வுசெய்வேன், அதை வாங்கியவர்களின் கருத்துக்களை அறிந்துகொள்வேன்.**

   அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

2. **தேவையற்றவைகளை வாங்கிவிடாதிருக்க பலசரக்கு வாங்கச் செல்லும்போது பட்டியலிட்டுச் செல்வேன்.**

   அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

3. **கடையின் திரும்பக்கொடுத்து பணத்தை மீழப்பெறும் கொள்கையை வாங்குமுன் தெரிந்துகொள்வேன்.**

   அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

4. **கூப்பன்களை உபயோகிப்பேன், சேல் போடப்பட்டுள்ளதா என வாங்குமுன் தெரிந்துகொள்வேன்.**

   அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

5. **சேல்போடும்போது அல்லது மொத்த வியாபாரக் கடையில் அதிகமாக வாங்கி சேர்த்து வைப்பேன்.**

   அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

6. **வங்கிய பொருளில் திருப்தியற்றிருந்தால் அதை திரும்பக்கொடுத்து மாற்றுவேன் அல்லது பணம் பெறுவேன்.**

   அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

7. **மலிவாக இருப்பதற்காக உணவு வாங்கும்போது அளவையும் விலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பேன்.**

   அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

8. **சிந்தித்துப் பார்க்காமல் வாங்குவதையும், " நான் வாங்கத் தகுதியானவன்" என்று உணர்ச்சி வசப்பட்டு வாங்குவதை தவிர்க்க முயற்சிசெய்வேன்.**

   அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

9. **குறைந்த விலையை நிர்ணயித்துக்கொள்ள, வாங்குமுன் பொருட்களை ஒப்பிட்டுப் பார்ப்பேன்**

   அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

10. **ஒரு பொருளைப் பற்றி கேள்வியிருந்தால், எனக்கு பதில் கிடைக்கும்வரை விற்பனையாளர் ஒருவரிடம் அதுபற்றி கேட்பேன்.**

    அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

11. **என்ன வாங்கினேன் என்பதைக் கவனிப்பதற்காகவும், திருப்பிக்கொடுக்க வேண்டி வரலாம் என்பதாலும் ரசீதுகளை வைத்திருப்பேன்.**

    அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

12. **தேர்ந்தெடுக்கும் போது நேம் பிராண்ட் பொருட்களைத்தான் வாங்க வேண்டுமென்பதில்லை. எதுவாக இருந்தாலும் தரமானதாகவும் மலிவானதாகவும் பார்த்து வாங்குவேன்.**

    அ) எப்போதும் ஆ) சிலவேளைகளில் இ) ஒருபோதும் இல்லை

**தொகுதி 9 – ஞானமான வாடிக்கையாளர் செயற்பாட்டுத் தாள் 9-1, தொடர்கிறது…**

**நீங்கள் வட்டமிட்ட அ, ஆ மற்றும் இ ஆகியவற்றை எண்ணுங்கள்**

**பெரும்பான்மையானவற்றிற்கு நீங்கள் ‘ அ’ என பதிலளித்திருந்தால்:**

நீங்கள் சாமர்த்தியமான வாடிக்கையாளர். நீங்கள் சிந்தித்து பொருட்களைப் பற்றி தெரிந்துகொண்டு அவற்றை வாங்குகிறீர்கள். கொஞ்சம் செலவழித்துப் பார்ப்போம் என்பதற்காக நீங்கள் பொருட்களை வாங்குவதில்லை. உங்கள் பணத்திற்கு நிறைய வாங்கவே நீங்கள் ஆசைப்படுகிறீர்கள். வாடிக்கையாளராக உங்கள் உரிமைகள் எவையென உங்களுக்குத் தெரியும். யாரும் உங்களை ஏமாற்றாதபடி கவனமாக இருக்கின்றீரகள் . இந்த வகுப்பில் கற்பிக்கப்படுபவை ஏற்கெனவே உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் நாம் எல்லொரும் தொடர்ந்து முன்னேறலாம்.

**பெரும்பான்மையானவற்றிற்கு நீங்கள் ‘ ஆ’ என பதிலளித்திருந்தால்:**

நீங்கள் ஒரு சாமர்த்தியமான வாடிக்கையாளர். ஆனால், நீங்கள் செலவழிக்கும் விதத்திற்கு கொஞ்சம் கவனம் செலுத்தினால் இன்னும் அதிக பணம் சேமிக்கலாம். வாடிக்கையாளரின் உரிமைகள் பற்றி நீங்கள் மேலும் கற்றுக்கொள்ளவேண்டும். நீங்கள் செலவழிக்கும் விதத்தை மேலும் அவதானிக்க வேண்டும். ஒரு வாடிக்கையாளராக நீங்கள் முன்னேற்றம் செய்யவேண்டிய விடயங்கள்பற்றி இந்த வகுப்பு சில நல்ல ஆலோசனைகளை உங்களுக்கு வழங்கும்.

**பெரும்பான்மையானவற்றிற்கு நீங்கள் ‘ இ’ என பதிலளித்திருந்தால்:**

இந்த வகுப்பு உங்களுக்கு நிறையவே பலனளிக்கும்! நீங்கள் செலவழிக்கும் விதத்தையும் கடைகளுக்குச் செல்லும் விதத்தையும் மாற்றுவதைப்பற்றி சற்று சிந்தியுங்கள். கொள்வனவு செய்வதற்கு முன் ஆராய்வதற்கு நேரம் எடுத்துக்கொண்டால் பணத்தை மிச்சம்பிடிக்கலாம். நீங்கள் ஏமாந்து போகாமல் இருப்பதற்காக வாடிக்கையாளராக உங்களுக்கிருக்கும் உரிமைகளைப்பற்றி மேலும் தெரிந்துகொள்வது பலனளிக்கும். இந்த எல்லா விடயங்களிலும் நீங்கள் முன்னேற்றம் செய்ய உதவும் குறிப்புகள் இந்த வகுப்பில் கிடைக்கும்.